# SBS நடைமுறைக் கோட்பாடு பற்றிய தகவல்



ஆஸ்திரேலிய அரசு வழங்கும் நிதியுடனும், விளம்பரங்கள் மற்றும் வேறு வணிகங்கள் மூலம் பெறப்படும் வருவாயுடனும் இயங்கும் ஒரு சுயாதீன, தொலைக்காட்சி, வானொலி மற்றும் எண்ம (டிஜிட்டல்) ஊடக சேவை SBS. **எமது சாசனத்தில்** குறிப்பிட்டபடி, ஆஸ்திரேலிய மக்களுக்கு சேவை வழங்குவதை முக்கிய பொறுப்பாகக் கொண்டு இயங்கும் ஒரு பொது நிறுவனமாகும். தனித்துவமான ஆஸ்திரேலிய கதைகள், உள்ளூர் மற்றும் சர்வதேச செய்திகள், நடப்பு விவகாரங்கள், விளையாட்டு செய்திகள், சர்வதேச நாடகங்கள் மற்றும் ஆவணப்படங்கள், உணவு குறித்த நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், அறுபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் ஒலிபரப்பாகும் உள்ளூர் வானொலி என்று பல ஒருங்கிணைந்து செயலாற்றும் சேவைகளை நாம் வழங்குகிறோம். பூர்வீக குடி மக்களின் கதைகளை மக்களுடன் பகிரும் நாம், பூர்வீக குடி மக்களின் பார்வையில் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளை National Indigenous Television (NITV) ஊடாக ஒளிபரப்புகிறோம்.

மக்களின் எதிர்பார்ப்புகளை நாம் பூர்த்தி செய்வதை உறுதிசெய்ய, "SBS நடைமுறைக் கோட்பாடு" என்ற ஆவணத்தை உருவாக்கியுள்ளோம். தொலைக்காட்சி, வானொலி, இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக நாங்கள் வழங்கும் அனைத்து SBS சேவைகளும் இந்தக் கோட்பாட்டிற்குக் கட்டுப்பட்டதாக அமைந்திருக்கும்.

**"SBS நடைமுறைக் கோட்பாடு" பின்வரும் முக்கிய விடயங்களை உள்ளடக்கியது:**

## நம்பிக்கை

### நம்பகமான மற்றும் பொருத்தமான உள்ளடக்கத்தை நாங்கள் வழங்கும் வழிகள்:

- நாங்கள் எடுத்து வரும் உள்ளடக்கம் குறித்து சுயாதீனமாக முடிவெடுக்கிறோம்.
- நாங்கள் பகிரும் செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களின் உள்ளடக்கம் துல்லியமானது, சீரானது மற்றும் பக்கச்சார்பற்றது. அத்துடன், அவை பொது மக்கள் நலன் சார்ந்துள்ளது.
- விரிவான பார்வையையும் முன்னோக்குகளையும் கொண்டுள்ளோம். நாம் எடுத்து வரும் உள்ளடக்கம் புதுமையானதாகவும், மக்கள் சிந்தனைக்குச் சவாலானதாகவும் அமையும். சர்ச்சைக்குரிய விடயங்களையோ, மக்களிடையே வாதத்தைத் தூண்டும் விடயங்களையோ நாம் எடுத்து வரத் தயங்குவதில்லை.

## வெளிப்படைத்தன்மை

### உள்ளடக்கங்களைத் தேர்வு செய்ய மக்களுக்கு நாங்கள் வழிகாட்டும் விதங்கள்:

- நாங்கள் வழங்கும் உள்ளடக்கத்தில், உங்களுக்கும் உங்கள் பராமரிப்பில் உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கும் ஏற்ற உள்ளடக்கங்களைத் தேர்வு செய்யத் தேவையான தரவுகளை நாங்கள் வழங்குகிறோம்.
- நாங்கள் வழங்கும் உள்ளடக்கத்திலிருந்து விளம்பரங்கள் வேறுபட்டவை என்பதை நாங்கள் உறுதிசெய்கிறோம் அத்துடன், சில வகையான விளம்பரங்கள் பகிரப்படுவது குறித்து விதிமுறைகளை உருவாக்கியுள்ளோம்.
- ஒருவரை நிலைகுலையச் செய்யும் அல்லது துன்பத்திற்குள்ளாக்கும் உள்ளடக்கங்களைப் பகிரும் போது, அதனால் பாதிப்படையக் கூடிய பார்வையாளர்களைக் கருத்தில் கொண்டு, பொருத்தமான இடங்களில் நாங்கள் எச்சரிக்கைகளை வழங்குகிறோம், மேலும் கூறப்படும் விடயத்திற்கு அந்தப் பொருள் தொடர்புடையதாக இருந்தால் மட்டுமே நாம் அதனைப் பகிர்வோம்.

## மதிப்பளித்தல்

### மற்றவருக்கு நாம் மதிப்பளிக்கும் முறைகள், அதனை மற்றவரிடையே ஊக்குவிக்கும் முறைகள்:

- பொதுப்படையாக விடயங்களை அணுகாமல், தப்பெண்ணத்தையும் பாகுபாட்டையும் ஊக்குவிக்கும் உள்ளடக்கத்தைத் தவிர்த்து, சூழலைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நாம் உள்ளடக்கங்களைப் பகிர்கிறோம்.
- ஆங்கிலம் தவிர்ந்த பிற மொழிகளிலும் உள்ளடக்கத்தைப் பகிர்கிறோம், மற்றும் பலவிதமான பார்வைகளின் வெளிப்பாட்டை ஊக்குவிக்கிறோம்.
- பூர்வீக குடி மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களது கலாச்சார நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு எமது உள்ளடக்கங்களைப் பகிர்கிறோம்.
- மக்களின் தனியுரிமைக்கு நாங்கள் மதிப்பளிக்கிறோம். செய்திகளை எடுத்து வரும் போது இதற்கு முக்கிய கவனம் செலுத்துகிறோம்.

## பொறுப்புக்கூறல்

### நாங்கள் பொறுப்புடன் நடக்கும் விதங்கள்:

- வழங்கும் உள்ளடக்கம் மற்றும் சேவைகளைப் பற்றிய கருத்துக்கள், பாராட்டுகள் மற்றும் முறைப்பாடுகளை தெரிவிப்பதற்கு பல்வேறு செயல் முறைகளை நாங்கள் உங்களுக்கு வழங்குகிறோம்.
- SBS நடைமுறைக் கோட்பாட்டின் அடிப்படையில் பெறப்படும் அனைத்து முறைப்பாடுகளையும் விசாரிக்க ஒரு சுயாதீனமான செயல்முறையை நாம் உருவாக்கியுள்ளோம். முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரியால் முறைப்பாடுகள் விசாரிக்கப்படுகின்றன.




SBS

மேலும் அறிந்து கொள்ள

sbs.com.au/aboutus/sbs-code-of-practice